ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1824/23 - 2013 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2013.08.23

*1824/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம்*

*15 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், பின்வருமாறு கட்டளை ஆக்குகின்றேன்.*

*(அ)* இக்கட்டளைக்கிணங்க அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபைக்கு –

(i) *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டம் ;*
(ii) *1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் ; அல்லது*
(iii) *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம்*

போன்றவற்றின் நோக்கெல்லையின் கீழ்வரும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செலுத்த முடியுமான சதவீதமாக வரிக்குப் பின்னரான இலாபத்தில் ஒரு சதவீதமாக பயிர்க் காப்புறுதி அறவீடு இருத்தல் வேண்டும்.

*(ஆ)* இக்கட்டளையானது 2013.04.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறுதல் வேண்டும்.

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

கொழும்பு,
*2013, ஓகத்து 21.*

**அட்டவணை I**

*(1)* வரி மதிப்பாண்டில் (ஏதேனும் வருடத்தில் ஏப்பிறல் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி அதனை உடனடுத்து வரும் வருடத்தின் மாச்சு மாதம் முப்பத்தியோராம் திகதி முடிவடையும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில்) ஒவ்வொரு காலாண்டிலும் (ஏதேனும் வருடத்தில் ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் மற்றும் உடன் தொடர்ந்துவரும் சனவரி மாதங்களிலிருந்து

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

ஆரம்பமாகும் முதல் மூன்று மாத காலப்பகுதி) தொடர்புடைய வரிமதிப்பாண்டின் இறுதியில் வங்கி இணக்கத்தினைத் தொடர்ந்து வரும் ஏதேனும் மேலதிகப் பொறுப்பு விடயத்தினைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட வரிமதிப்பாண்டினை உடனடுத்து தொடர்ந்து வரும் வரிமதிப்பாண்டில் செத்தெம்பர் மாதத்தின் முப்பதாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவு தொடர்பில் தொடர்ந்துவரும் ஏதேனும் வரிமதிப்பாண்டில் செலுத்த வேண்டியுள்ள வரி அறவீட்டுக்கெதிராக கழிப்பனவு செய்வதற்கு முடியும்.

(2) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையினால் இந்நோக்கத்திற்காகத் திறக்கப்பட்ட கணக்கிற்கு ஒவ்வொரு நிறுவனமும் அத்தகைய வரியினைச் செலுத்துதல் வேண்டும். உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் அத்தகைய வரியினை அல்லது அதன் பகுதியினை செலுத்தாத சந்தர்ப்பத்தில், அவ்வாறு செலுத்த வேண்டிய வரிக்கு மேலதிகமாக, தவறுகையிலுள்ள அத்தகைய வரியில் பத்து சதவீதத்திற்குச் சமனான தண்டமொன்றினை, அவ்வாறு தவறவிடப்பட்டு முதல் முப்பது நாட்களுக்குள் அறவிட வேண்டுமென்பதுடன் மேலதிக ஒவ்வொரு முப்பது நாட்களுக்கு அல்லது அதன் பகுதிக்கு மேலும் இரண்டு சதவீத வரியும் செலுத்த வேண்டிய வரிக்கு மேலதிகமாக (வரி அறவீட்டில் 50 சதவீத்தினை விஞ்சாது) அறவிடப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், நடைமுறை வரி மதிப்பாண்டினைத் தொடர்ந்த வரிக்குப் பின்னரான இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்ட தொடர்புடைய வரி அறவீட்டின் ஆகக்குறைந்தது நான்கிலொன்று (1/4) குறிப்பீடு செய்யப்பட்ட திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு காலாண்டுக்கும் செலுத்தப்பட்டிருப்பதுடன், ஏதாவது மீதி அறவீடு குறித்த வரி மதிப்பாண்டினைத் தொடர்ந்துவரும் வரிமதிப்பாண்டின் செத்தெம்பர் மாதம் முப்பதாம் திகதி அல்லது அதற்கு முன்னர் உண்மையான பொறுப்புடமையினை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் செலுத்தி இருப்பின் தண்டம் அறவிடப்படமாட்டாது.

மேலும், எவ்வாறாயினும், 2013, யூலை 31 அன்று அல்லது அதற்கு முன்னர் நிலுவையாக உள்ள, 2013, யூன் 30 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டுக்காக செலுத்தப்படவேண்டியுள்ள அறவீட்டுக்காக, அத்தகைய அறவீடு 2013, செத்தெம்பர் 30 இல் முடிவடைந்த காலாண்டுக்காக செலுத்தப்படும் அறவீட்டுடன் 2013, ஒற்றோபர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுமாயின் தண்டம் அறவிடப்படமாட்டாது.

9 - 118

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.